'ஆம்' என்பதாகும். இந்த அரசு கிராமப் பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து அதற்காக எல்லா வளர்ச்சித் தலைப்புகளின் கீழும் பெருமளவு நிதி ஒதுக்கம் செய்துள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டதன் விளைவாக ஒரு வட்டாரம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் I ஆம் நிலை, II ஆம் நிலையில் இருப்பினும் அல்லது II ஆம் நிலைக்குப் மேம்பட்டு இருப்பினும், வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கத்தைப் பொறுத்தவரையில் எல்லா வட்டங்களும் ஒரே அளவில் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது.

திரு. டி. கணபதி: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர், நாங்குனேரி, இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் பஞ்சப் பிரதேசமாக இருப்பதால், அவைகளுக்குக் கூடுதலான நிதி ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி போடவும்.

Conference of Employees of Panchayat Unions

* 195 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether a conference of Employees of Panchayat Unions was held on 1-5-1971 at Madurai; and

(b) whether the resolutions passed at the conference were communicated to the Government; and

(c) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம்;

(இ) ஆம்;

(உ) அவை அரசின் பரிசிலனையிலுள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும் ஊழியர்கள் சுமார் 15 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டுமென்றும், தங்களை உள்ளாட்சித் துறையின் கீழ் நேரடியாகக் கொண்டுவர வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். நிர்வாக சீரமைப்புக் குழுவில் அவர்களுடைய விஷயங்களையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதா? எந்தெந்த விஷயங்களில் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கைக்கு வரப்பெற்று, ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அதுபற்றி கருத்துக்கள் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அதுபற்றி யோசிக்க வேண்டும். சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பதைக் குறித்து நிதித் துறை ஆராய்ந்து அனுப்ப வேண்டியிருக்கிறது. மற்றொரு கோரிக்கை அவர்களை வருவாய்த் துறையிலிருந்து பிரித்து, உள்ளாட்சித் துறையின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தைப்

பற்றி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினிடத்தில் கருத்துரை கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்தறிந்து தக்க முடிவுகள் எடுத்த பிறகுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, யூனியனில் வேலை செய்பவர்களை யூனியன் ஸ்டாப் என்றும், கவர்ன்மென்ட் ஸ்டாப் என்றும் இரண்டு பிரிவு களாகப் பிரித்து பாகுபாடு செய்யப்படுகிறது. எல்லோரையும் கவர்ன் மென்ட் ஸ்டாப் என்ற அளவில் ஒரே சீராகக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எல்லோ ரையும் ஒரே நிலையில் கொண்டுவர முடியாது. உள்ளாட்சித் துறை தனியாக இருக்கிறது. அதில் பல வகையான நிர்வாக சீர்திருத்தங்கள் செய்யலாமா என்பதைக் குறித்து ஆராய நிர்வாக சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டிருக் கிறது. எல்லோரையும் ஒரே துறையில் கொண்டு வருவது என்பது சரியாக இருக்காது. உள்ளாட்சித் துறை பல்வேறு அரசாங்கத் துறைகளோடு தொடர்பு கொண்டுதான் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் எடுத்து விட்டால் பின்னர் உள்ளாட்சித் துறை என்று தனியாக இருக்க முடியாது.

மங்கலத்திலுள்ள மருத்துவ மனை

***196 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலத்திலுள்ள மருத்துவமனை மூடப்பட்டு விட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்;

(இ) மங்கலத்தில் உள்ள நாட்டு மருத்துவமனையில் பணிபுரிய எந்த மருத்துவரும் முன் வராததால், அம் மருத்துவமனை மூடப்பட்டது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே அங்கே இருக்கிற மக்களுக்கு மருத்துவ வசதி வேண்டுமென்றால், அவர்கள் 7 மைல் தூரத்திலுள்ள திருப்பூருக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. இந்தக் குறையைப் போக்கு கின்ற முறையில் எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்ற டாக்டர் ஒருவரை அங்கே போட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது நாட்டு மருத்துவமனையாக இருந்து வந்தது. ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு மொத்த ஊதியம் என்று வழங்கப்படுகிற நிலையிலிருந்தது. இந்தக் காரணத்தால் பணி புரிய யாரும் வாராததால் மருத்துவமனை மூடப்பட்டது. திருப்பூர் பஞ்சாயத்து யூனியன் சார்பாக 1½ ஆண்டுக்கு முன்னாலே நாட்டு மருத்துவ மனையை, நவீன மருத்துவமனையாக, ரூரல் டிஸ்பென்சரியாக, மாடர்ன் டிஸ் பென்சரியாக மாற்றியமைக்க வேண்டும் என்று கோரிக்கை அனுப்பப்பட்டது. புதிய நவீன மருத்துவமனையாக ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்திருக் கிறார்கள். அதற்குப் பக்கத்தில் பொங்கலூர் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஒரு மருத்துவரை மருத்துவம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு, அவரும்